[illegible]

[illegible]

നാടകം.

TDRC 3300
RR No 7-2-1889.

DIGITIZED

0,892MBR,G
M89
116624

7

ஞானச்சவுந்தரியம்மாள்

நாடகம்.

7/2-1889

———:o:———

3300

தாளை

மாசிகிருமுனிசிபு

சவியேர்க்குருசுப் பர்நாந்து கணக்கப்பிள்ளை

அண்ணாவியவர்களால்

இயற்றப்பட்டு,

இராமநாதபுரம்

எஸ். பி. ஜி. மிஷியோன்

எஸ். முத்துநாயகம் ணாற்றரால்

பதிப்பிக்கப்பட்டது.

1889.

———:o:———

RAMNAD:

PRINTED FOR THE AUTHOR

AT

THE S. P. G. INDUSTRIAL PRESS.

Copy Right Reserved.

114894
O,892 MBA,G
MB9

சபைக் கட்டு.

இன்னிலத்திலாதம் எவை செய்த பாவ
இடரகற்ற வேக பிதாவின் குமாரன்
கன்னிமரி திரு வயிற்றில் மனுவாய்த் தோன்றிக்
கருதரிய வெல்லைமலைச் சார்பில் வந்த
பொன்னுலக ராஜனேசு நாதர் தாமும்
புகழ் பெருகு சிகரமதிற் சுமந்து நின்ற
நன்மை நிறை அர்ச்சிஷ்ட சிலுவை தன்னை
நமஸ்கரித்து அநுதினமு முத்தி செய்வோம்.

2. எங்கு நிறை கடவுளரே வானோர் போற்று
மேகனே தயை நிறைந்த இறைவனுந்தன்
தங்க மயமொளி வீசு மோட்சந் தன்னிற்
சகலவர் சிஷ்டோர் சாந்து சாந்தென்றே வணங்குஞ்
சங்கை மிகும் பிதாச் சுதனிஸ்பிரீத்து சாந்து
தம் திருத்துவத்திலொன்றாய மைத்திருக்கு
மிங்கு மெங்கள் பீடமதிலேற்றஞ் செய்யும்
ஏசு நசரேசனுக்குத் தோத்திரமாமே.

3. செருசலை மாநகரெழும் பொந்தியு பிலாத்து
சித்த மதில் நினைத்த வண்ணமேசு நாதர்
திருப்புயத்திற் சிலுவை தன்னைச் சுமந்து நின்று
சிகரி யெனும் கபால மலைக் குன்றுயேக
வருந்துயராற்றள்ளாடித் தியங்கும் வேளை
வனிதையர்கள் சிலர் கூட மனது நொந்து
மருகியன்று வியாகுலவாள் உருவுகின்ற
மாமரியே மகனிடம் மன்றாடுவாயே

4. கிறிஸ்தவர்கள் தங்கள் சகாயத்தின் தாயே
கிருபை யொளி யேகசுதன் தனை யீன்றாயே
திரித்துவத்தாற் கிரீடமுடி புனைந்த தாயே
தீ நரக வலனகை மதந் தீர்த்த தாயே
வருத்த முறும் பாவிகளுக் காதரவாய் வந்த தாயே

வான பரனோடிருந்து மகிழ்ந்த தாயே
கர்த்தினு லெந்நாளும் ஆசிர் வதித்தான் தாயே
கன்னிமரியா முபகார மரிய தாயே.

5. ஆதரையில் வாழ் பெரியோர் சகல நூல்க
ளாருய்ந்த கலைஞான கல்வி சாஸ்திரர்
பாதமதைப் போற்றியே தாசரிந்த
பரிசுத்த கன்னி கதை பகர்வதாலே
பேதை சிறு பிள்ளைகளின் படிப்பிற் குற்றம்
பிசகியே தாழமதில் பிழை கண்டாலும்
வாதுகள் பேசா மலைந்து காயத்தானை
வந்த கிறிஸ்தோர்களிதைப் பொருந் திடீரே.

6. பல திசையும் விரோதமாய் வருஞ் சத்ராதி
பதினாலுலகில் வருஞ் சத்ராதி
அலகையுட தொழில் மாய்கை ஜால வித்தை
அடருகின்ற கொடிய துஷ்டர் கிடு கிடென
திலதமதை யிடுவோர் மத்தளம் வீணை
தெரிந்திடவே செய்வோர் தலை யுருளப் பேய்கள்
விலகியே சடுதி யினிலோடிப் போங்கோ
விமலனைந்து காயத்தானை விளம்பினேனே.

மிக்கேல் சம்மனசு பாலே.

திருவருள் சேர் பரமகதி புவனம் யாவும்
சிருட்டித்த பரன்கதியில் வீற்றிருக்க
வரமிகுந்த தூதர்களைத் தெரிந்த பின்பு
வானவர்க்குளதியோக வரமே பெற்று
நீசனார்க்கு நடுப்புரிய வருகும் போது
நலமாகச் சிலுவை தன்னைக் கரத்திற் கொண்டு
சருவ பரன் கூட வெகு புகழாய்த் தோன்றும்
சம்மிக்கேலாஞ்சுகள் கர்த்தனே

காவலன் சம்மனசு பாலே.

பிருலவு பிதாச் சுதனி ஸ்பிரீத்து சாந்த
திரியேக கடவுளருன் சித்தத்தாலே

நேருலவு மோட்சகதி வீற்றிருந்து
நிலத்தோ ராத்துமத்தின் பாதுவாக
பேருலகில் கீர்த்தி கொண்டு செல்வம் ஓங்கும்
பேசரியப் பொற்பகர்ஜனர்களுக்கு
தாருலவு தற்பரனால் தெரிந்த காவல்
சம்மனசு நாமமெனச் சாற்றலாமே

தரு.

எகோவா—என்னும்—எசுவின் தூதர்நாமே

சரணங்கள்.

1. மாகமெனும் பரலோகமதில் வெகு
வாசமாய் வீற்றிருந்து—சத்திய
ஆகமனதை யேகமாய்த் தேர்ந்திடும்
ஆஞ்சுகளும் நாமே. எகோ.

2. ஆசியா அமேரிக்கா தேசத்தில் விஷவியாதி
அடர்கின்ற வேளையிலே—திவ்விய
எசு இஸ்மரிருசை என்று விலக்கிய
நேச தூதர்நாமே. எகோ.

3. பாலிலு மோனிய சீர்மைதனில் மூன்று
பாலரை சூளைகளில்—வைக்கும்
வேளையில் வந்து உதவியாறுதல் செய்த
விண்ணவரும் நாமே. எகோ.

4. அன்றளில் கிஸ்தேரி யம்மாள் தனைப் பெற்ற
அரசன் சிறையில் வைக்க—அப்போ
முன்னேகிக் காலினிற்ப் பூட்டும் விலங்கை
முறித்திடும் தூதர் நாமே எகோ.

5. கன்னிமரு கருதானை ஒலிவோன்
கடோம்செய் வேளையிலே—அப்போ
உன்னியே வந்து உதவியாறுதல் செய்த
உத்தம தூதர் நாமே. எகோ.

6. மாதயவாய் உலகோருக்காய்ப் பூங்கா
வனமதில் ஏக சுதன்—பிதாவை

நீதியாய் வேண்டும் போது வேர்வை துடைத்த
நேச வானோர் நாமே. வகோ.

7. வாசம் நிறைந்திடும் பொற்ப நகரினில்
வாழும் ஜனர்களுக்கு—நித்தம்
பாசமனுகாமை வைத்துப் பாதுகாக்கின்ற
பரம தூதர் நாமே. வகோ.

சம்மனசு தோத்திரப் பாலே.

சீர் நிறை பரம ஆதி, திரித்துவர்க் கென்றும் வாழி
வர் நிறை உபகாரத்தால், இருபத சரணே வாழி
பார் நிறைந் திலங்கும் பொற்ப, பதிநகர் மீதில் நீடும்
பேர் நிறை கிறிஸ்தோரெல்லாம், பெருக நீடுழியாமே.

கோமாளி தோற்ற விருத்தம்.

சுருண்டிடும் தலைப்பாக் கட்டி
தொந்திபோல் வயுருங் காட்டி
திரண்டிடும் தாடி மீசை
தெத்திய பல்லும் நீண்டு
முரண்டன்போல் விழி சிமிட்டி
மோடியாய் ஆடிப்பாடி
மிரண்டிடும் நழினம் பேசும்
வீர கோமாளி நானே.

தரு.

வாசம் நிறை ரோமை, தேசம் ஆண்டிடும்
மன்னென்னும் தர்மருயரின்
ருஜன் சரணடி, நேசமாய் வாழ்த்தியே
நழினமுறுங் கோமாளி தோன்றினன்.
முடுக்கு. தாய்கிட செந்தரி, தரிகிட செந்தரி
தத்திலாகு செந்தரி கிடதோமென—தத்தை.
2. சிரத்தில்க் குல்லாவும், காதில்க் காண்டியம்
செம்பட்டை மீசையும் துலங்கவே—நல்ல

நரைத்த தாடியும், துருத்திய பல்லுடன்
சிரித்துக்கோமாளியும் தோன்றினனே
முடுக்கு. தச்சம் தகசம், தரிகிடகிட திமி
தருவத்தரி கிட திமி திமி தோமென—தத்தை.
3. சத்திய வேதத்தை, நித்திய துதித்திடா
பித்தர்கள் தலையே பிடித்துடன்—வெகு
புத்தி யறிவுகள், நத்து தலாய் ஓதும்
சித்திரக் கோமாளியும் தோன்றினனே—தாய்கிட
4. மன்னன் சொற்படியே, எண்ணியே நடவாத
வண்டர்கள் தலையே பிடித்துடன்—அவர்
சென்னி தலை யடித் துடைத்திடும்
தீர் கோமாளியும் தோன்றினனே
முடுக்கு. செந்திரி நாதிரி திமி திமி நாதிரி
திகுர்தத் திகுர்தத் தித்திமி தோமென—தத்தை

கட்டியர் தோற்ற விருத்தம்.

சிரசினில்ச் சருகைப் பாவும், சிறப்புடன் பிணைந்து நீடி,
வரிசையாயுடை யணிந்து, வளர் கரம் பிரம்புமேந்தி,
நரபதி தருமருஜா, நலம் பெரும் வாசல் காக்கும்,
கருதலாய்ப் புகழ்ச்சி கூறும், கட்டியர் வருகின்றாமே

தரு.

சங்கீதமேவும் கட்டியர் வந்தார்...சபையதனில்
சங்கீதமேவும் கட்டியர் வந்தார்.
அ. ப. சங்கிதக் கட்டியர் வந்தார், மங்கள ருகம் பாடி
சத்திய நெறி முறை நித்தியம் தவறிடா
தர்ம ருஜேந்திரன், நரபதி வாசல்—சங்கீத.
1 சிரசில் குல்லா முடி துலங்க—திரேகமதில்
சிறப்பாயுடையது யிலங்க—ஒளி யிலங்க
வரிசையுடன் காதில், வர்ணப் பிரம்பும் யேந்தி
மகுடமுடி புனையும், விகசித யோகனும்
மன்னவரெனும் செல்வ, தர்ம ருஜேந்திரன் வாசல்—ச.

2. மார்பில்பதைக்கமின்னிநீட—ரூக்கங்கள் பாட
வளர் காலில் கெச்சம் கொஞ்சியாட—கொலுச் கூட
சார்பமுடன் ரேமையாழ், தர்ம மகராஜேந்திரன்
சாற்றிய, யேவல்கள், யெற்றியே சரணடி
போற்றியே யனுதினம், நேற்றியாய் நீடிடும்—சங்.
3. திந்திமத்தாளங்கள் முளங்க—திடீர் திடீரென
எத்திசையு முன்பேர் விளங்க—சரமலுங்க
தத்தை தரிகிடென்ன, ஒத்துமுர, சொலிக்க
தகுர்தசெணு தரி, சரிகமபதனித
தர்குஜெணுந்திரி தக்திமித்தோமென—சங்.

கட்டியம் கூருதல்.

பதியாசர் புகழ் கூற நெதிகளோடு நிதிகொண்டு
பாருலகை யாழும் விற்பன்ன................பரா̄க்
சதிபுரியும் மருவலர்கள் வெகு விசன முாளவே
தாணி தனில் வதைபுரியும் தாயாளா......பாரேக்
திக்காசர்புடை சூள சக்கிர துரை மனு நீதி
தென்னவர்கள் அடிதொழும் தீரா......பாரேக்
தித்தியோடு மத்தளம், முடுக்கை தவில் ஒத்ததொனி
சிறந்து புடை சூள வரும் செல்வா........பாரேக்
பத்தி நெறி யுற்ற தவ இத்தரையில் யுற்றிடுகும்
வெற்றி முடி பெற்றாய்......................பாரேக்
கனமிருக்கும், கொடைய துக்கும் திடமிருக்கும்
படையதுக்கும் கொடைகர்ண..........பாரேக்
தர்ம மகராஜேந்திரன் கொலுவுக் கெழுந் தருளி
வருகிறார்.......................................எச்சரீக்கை

சாம்போர் தோற்ற விருத்தம்.

தலைதனில் லேஞ்சும் கட்டி,
தப்பட்டை முரசுங்கொட்டி,
விழிகள் ரெண்டும் சிவக்க,
வெரிமிஞ்சக்கள்ளருந்தி;
நலமுடன் ரோமைராஜ்ஜியம்,

நன்மையாய் ஆளும் மன்னன்,
கொலுமிசை வார செய்தி,
கோதிடச்சாம்போர் வந்தார்;

தரு.

1. சீர்நிறை ரோமைராஜ்ஜியம்—ஆளுஞ்
செல்வர் தர்ம ராஜர் வார
பேர் நிறைந்த பறைசாற்ற—சாம்புவர்
பிரியமுடன் சபைதனில்த் தோன்றினரே
2. முரசது கழுத்திலிட்டு—நல்ல
முருங்கை கம்புகொண்டோடியடித்து
மறுமன்னியர் வாராமல்—பறைசாற்ற
வள்ளுவச்சாம்புவர் தோன்றினரே.
3. நாற்றமுள்ள கள்ளைக்குடித்து—கால்தள்ளாடி
நாய்கள் போலே குலைத்தார்ப்பாடி
வேர்த்து உடல் கிறு கிறென்ன—சாம்புவர்
வேடிக்கையாக இதோ தோன்றினரே
4. செத்த மாடுதனை யறுத்து—அதிலொரு
சிறு குடல் தனையே நெருப்பில் பொரித்து
பத்துப் போத்தல் சாராயம்—குடிக்கின்ற
பரச்சியும் பறையனும் தோன்றினோமே
5. எந்தனுட நைந்தேமாறே—சாராயம் கள்ளு
எங்களுக்கென்றே சிவன் தான் படைக்க
சந்தோஷமாய் நீங்கள் குடித்து—வெறி மிஞ்சி
சண்டைகள் பிடித்திடவும் நியாயமுண்டோ
6. கீழ்ச்சாதி மேல்ச்சாதி யென்று—முன்னே
கிறிஸ்து நாதருல கிலுண்டாக்கினாரோ
தாழ்வான கள்ளைக் குடித்தோம்—நாங்கள்
ஜாதி கெட்ட பறையராய்ப் போனோமையோ.
7. ஓ நைந்தே நாச்சிமாரே!—யெங்கள்
உத்தமன் தருமராஜன் வாறார்
நேமமுடன் பேசாதேங்கோ—அவர் பதம்
நீடியே துதித்துவாழ்ந்திடுவீர்.

மகாராஜராஜன் ஜெக ராஜபோஜன்
மாமண்டலீகன் மன்னவன் தர்மராயர்
ரத்ன கொலுவாசன முன்பாக யெழுந்த
ருளி வருகிறார்—அரிகுவீராக.

தருமராயர் தோற்ற விருத்தம்.

தங்க ரத்ன கிரீடமுடி சிரசில் மின்ன,
ததமணிய வெண்டாள மணி தள தளென்ன,
செங்கோல் கரமீதிலங்கி யொளிகளார்ப்ப,
திரேகமதில் மணிமாலை யசைந்துலாவ;
மங்கையர்கள் யிருபுரமும் கவரி வீச,
மட மடெனக் கட்டியர்கள் புகழ்சி கூற,
சங்கை நிறை ரோமை நகராளுகின்ற,
தரும மகாராஜேந்திரன் வருகின்றோமே.

தரு.

1. சீருலவு யேகனருளால்—ரோமை நகர்
தேசமதையரசு புரியும்
பேர் நிறைந்த தருமராஜர்—சபையதினில்
பிரபலமாய் வருகின்றோமே

2. சுடிகை தன்னில் மகுட மின்னவே—பொற் சரிகை
துயிலிஒளி பளபளென்னவே
திடமுடனே ரோமையாளும்—தருமராயர்
சிறப்புடனே வருகின்றோமே

3. மார்பில் ரத்ன மாலை யசைய—கட்டியர்கள்
மங்களமாய் ராகமிசைய
சார்பமுடன் ரோமை ராஜ்ஜியம்—தனையாளும்
தர்மராஜேந்திரன் நாமே

4. தம்பூர் வீணை தவில் முழங்கவே—பாவலர்கள்
சங்கீத தொனி விளங்கவே

வம்பர்களும் நடுநடுங்கவே—ரோமையாளும்
மகராஜன் வருகின்றோமே

5. சந்திர வட்டக் குடை சூழவே—மருவலர்கள்
நமது திரை கொண்டேற்றவே
சிந்தை மகிழ் வாக ரோமை—தனையாளும்
ஜெகபதியும் வருகின்றோமே

6. சத்திய நெறி வழுகிடாமல்—அநுதினமும்
தற்பரனை மனதில் நினைந்து
நித்தியமும் ரோமை ராஜ்ஜியம்—தனையாளும்
நிருப தர்ம ராஜர் நாமே

ராயர் கொலுவாசன விருத்தம்.

மூவுலக மதினில் மேவிய பொருளும்,
மொழிபல உயிரெல்லாம் படைத்து;
மூன்று தத்துவமாய் ஆண்ட தோர் பொருளாய்,
முந்திடும் ஆறு லட்சணமாய்;
பாவிகள் தனக்கும் ஜீவியர்களுக்கும்,
பரிவுடன் தீர்வை சொல் நிலையாய்;
பலவுயிர் காத்து நிலையாய் ரட்சித்து,
பரிந்தமு தூட்ட வல்லபமாய்;
தேவுலக அமராடி பணிந் திறைஞ்ச,
ஜெக தலத்தோரெல்லாம் பணிய;
செப்பு காரணனே ஒப்பில்லாவானே,
தேவனே யேசு நாயகனே;
நாவினாலு மது பாதமே துதிப்பேன்,
நாதன் கற்பனைப்படி நடப்பேன்;
நன்மையே கூர்ந்து உண்மை சேர்ந்தெனையே
நாளிலத் தென்னை யாண்டருளே.

ராயர் கட்டியற்கு விருத்தம்.

ஆசன மீதில் நின்று, அவசிய யெவல் செய்யும்
தாசர்களான யெந்தன், தருகணரியம்பக் கேளும்

நேசமாய் நமது முன்பில், நீடியே வழமை சாற்றும்
பாசமே நிறைந்த யெந்தன், மந்திரியையழைத்து வாரீர்.

வ—ம். அகோவாரும் கட்டியரே! நமது வாசல்ப்பிரதானியாகிய மதியூகி மந்திரியை யழைத்து வருவீர்களாக.

அப்படியே யழைத்து வருகிறோமையா சுவாமி.

மந்திரி தோற்ற விருத்தம்,

அளகு யொளி ரிலகுரற்ன கிரீடகுல்லா,
அதிவிதமாய் சிரசில்லலங்கரிப்பாய் பூண்டு ;
ஒளிர் பெருகு சரிகை அங்கி மெய்யில் நீட,
உச்சிதம் சேர் சமுதாடு கரத்திலேந்தி ;
பளபளென்ன மார்பில் ரற்ன கோர்வை மாலை,
பதைக்கமுடன் வெண்டரள மணி குலுங்க ;
நலமுடனே ராஜன் முன்பில் வளமை சாற்றும்,
நன்மை நிறைமதி யூகி மந்திரி நானே.

தரு.

1. சிரசில் பரிதி யொளிர், நிறை பொற் கிரணமுடி
செயலுற்றிடவே மின்னி நீட—நல்ல
வரிசைக்குரிய பிரபல முற்றிலகும் ராஜன்
மன்னன் மனமகிழும் மதி மந்திரி நானே—தன்னே
2. சருகை துயிலினுடை, கெருவத்துடனே மெய்யில்
சறி யொற்றிடவே அசைந்திலங்க—நல்ல
அறிவுற்றிடு முல்லாச மதிபெற்றிடும் குணல
அதிசூர தீரமிகும் துரை மந்திரி நானே—தன்னே
3. வண்டார் தனையே குலை, நன்றாய் புரியும்வீர
மகத்துவ சாயுட்சிய பூமன்—இந்த
மண்டலங்கள் புகழ்கொண்ட மகராஜேந்திரன்
வாசற்குகந்த நேச மதிமந்திரி நானே—தன்னே
4. சத்திய வேதமதை, நித்தியம் தவறிடா
தரும செயல் நிறைந்த பூமன்—வெகு
துத்திய மிலகு யோக விஸ்தார வளமை சாற்றும்
சுக செய மிலகிய மதி மந்திரி நானே—தன்னே

கட்டியர் மந்திரிக்கு விருத்தம்.

பதிதனில ரசர்க்கெல்லாம், பருவமே சொல்லவல்ல
மதிபலவுரைக்கும் நீதி, மந்திரி தலைவா போற்றி;
துதி பெறும் தருமராயர் சமுகன்முன் அழைத்தாரிப்போ
நிதியுடனெங்கள் கூட, நேசமாய் வருகுவீரே.

வ—ம். சரணமே சரணமையா மதிமந்திரி தலைவரே! நமது ராய ரழைக்கச் சொன்னார் வருவீராக.

அப்படியே வருகிறேன் கட்டியரே.

ராயருக்கு மந்திரி விருத்தம்.

பத்திராசனத்தெழுந்து, பண்புடன் றோமைராஜ்ஜியம்
நித்தியமுமாளுகின்ற, நிருபனே சரணம் போற்றி ;
சித்தமே மகிழ்ந்து அற்ப, சிறியனை யழைத்த செய்தி
வெற்றியாயின்னதென்று, விளம்பிட சித்தமாமே.

வ—ம். சரணமே சரணமையா ராஜதீரனே! அடியேனை உங்கள் பத்திராசன முன் அழைத்த விபரம் திருவுளம் பற்றி யருள வேணுமையா சுவாமி.

ராயர் மந்திரிக்கு விருத்தம்.

அருளுவீரென்றென்முன், ஆசையாய் மொழிகள்பேசும்
பிரபலம் நிறைந்த மந்திரி, பேசிடக் கேளுமிப்போ
வரிசைமாய் நமது ராஜ்ஜிய, வளமைகளனைத்தும் நன்றாய்
தெரிவா நமது முன்பில, சிறப்புடன் பகருவீரே.

வ—ம். அகோ வாரும் மந்திரியே! நமது நாடு நகர் சிறப்பை நாம் அறியச் சொல்வாயாக.

அப்படியே சொல்லுகிறேனையா மகராஜேந்திரனே.

நாட்டு வளத்தரு.

ம. ராஜ்ஜிய வளமானதெல்லாம், நலமுடனே செப்புமென்று
மீட்சையுடனே பகர்ந்த, வேந்தனே சரணம்போற்றி நல்ல
சூட்சமுடனராஜாமு—முங்கள்

ராஜ்ஜியமதில் நிதம்வாழும்—மனுவோர்
தாட்சணிய மாகயென்னாளும்—ஒன்றாய்
மூர்ச்சையாயா முராசரசே.

ரா. மன்னவர்கள் மகிழுசெய, மதியூகி மந்திரியே!
மண்ணில்வாழ்மனுவோர்கள் வளமைதனைநீயுரைத்தாய்
—மந்திரி

யுண்ணுமிருகங்களுண்டோ—அதில்
வர்ணச் சவுந்தங்கள் நன்றோ—அந்த
பண்ணும் தொனியிசையொன்றோ—அதை
யென்னிடம் சொல்லுவாய் மந்திரி.

ம. காடி புலி யாழி சிங்கம், கடுவாய் மான் முயல் குதிரை
அரவமொடு மாடு முயல், அகமகிழ்ந்து நீடுதையா—நல்ல
வரிசையுடனன்னம் குயிலும்—கொக்கு
குருவியுடன் கிளி மயிலும்—ஒன்றாய்
சரியாகவேபரந்தொயிலும்—தொனி
புரிகுதுன்தேசமென்னரசே.

ரா. சந்திர முகவசிகரனே, சாற்றும் வளமானதெல்லாம்
சிந்தைதனில்கேட்டுவெகுசிறப்புற்றேன் மந்திரியே—நல்ல
அந்தமுடன் செந்நெல் விளைவும்—அதில்
சுந்தமலர் வாசத்தெளிவும்—பொன்னோ
டைந்தாரத்னவைர ஒளியும்—வெகு
விந்தையுடன் பகர்வாயே.

ம. பச்சை வைடூரிய முத்து, பவளங் கோமேதகமும்
வச்சிர மாகதமுடனே, வளர்ந்து விளங்கோங்குதையா
—நல்ல

பிச்சு முல்லைமலர் மேவும்—அதில்
உச்சிதமாய் ரோஜாப் பூவும்—வெகு
செச்சையுடன் செந்நெல்யாவும்—ஒன்றாய்
கெட்சிதமாய் நீடுதரசே.

ரா. அளகிலகு விகசிதனே, அதிவித நிதாகரனே
தெளிவான புத்திமிக, செப்புகின்ற மந்திரி கேள்—நல்ல
விளிமடமாதர்கள் கூத்தும்—நிதம்
குளவாக யென்னையே போற்றும்—அந்த

எளியவர் தங்களைத் தேற்றும்—நல்ல
வளமையை யென்னிடம் சாற்றும்.

ம. தங்கரத்ன முடியரசே, தத்துவம் சேர் பிரபலனே
செங்கோல் கரமீதேந்தி, ஜெக தலத்தை ஆள் செயனே—
நல்ல

மங்கையர் நடனமாடி—வெகு
சங்கீத ராகங்கள் பாடி—நிதம்
உங்களின் பாதமேதேடி—வெகு
சங்கையாய் நீடோரரசே.

ராயர் மந்திரிக்கு விருத்தம்.

அந்தமாய்நமது முன்பில், அருளிய வழமையெல்லாம்
சிந்தையில்கேட்டு ரெம்ப, க்ஷேமசந்தோஷ முற்றோம்
சந்ததமாகதேவ, தற்பரன் தனைத் துதித்து
விந்தையாய்நமது முன்பில், மேன்மையா யிருப்பீராக.

(வ—ம்.) அகோ வாரும் மந்திரியே! நாடுநகர் வழமை கேட்டு ரெம்பவும் பிரிய சந்தோஷமானோம், ஆகையால் பரமகடவுளாகிய சருவேஸ்பரனைத் துதித்து, நமது ரத்னசிம்மாசன முன்பில் நீடு வாழ்ந்திருப்பீராக.
அப்படியே யிருக்கிறேனையா சுவாமி.

குடியானோர் தோற்ற விருத்தம்.

காவினிற் பயிர்களெல்லாம், கலைமறை விலங்கு யாவும்
மேவியே யளித்ததாலே, மேவிந்தவர் பதியை விட்டு
ஆவலாய்த் தருமராயர், அடியிணைப் பணிந்து போற்ற
ஏகியே குடியானோர்கள், இயலுடன்வருகின்றோமே.

தரு.

1 சீர் நிறைந்த ரோமை ராட்ஜியம்,
செல்வமுட னொழுகின்ற,
பேர் நிறைந்த ராஜர் முன்பில்,
பிரியமாய் குடியானோர்கள் வந்தார்.

2. சிரத்தினில்த் தலைப்பாவுங்கட்டி,
சிறந்த உடைகள்பூட்டியே,
கரத்தினில்க் கவைக்கம்பும் ஊன்றி,
கதித்த சமுசாரிகள் வந்தார்.

3. காட்டினில் விதைத்த பயிர்,
கதிர்கள் முளைத்த தெல்லாம்,
சேட்டமாய் விலங்களித்த,
செய்தி சொல் சமுசாரிகள் வந்தார்.

4. கையில்வில்லு அம்புடனே,
கனத்ததடி யுமேந்தியே,
வையம் புகழ் ராயர் முன்பில்,
வண்மையாய் சமுசாரிகள் வந்தார்.

குடியானோர் ராயருக்கு விருத்தம்.

துங்கனேயர்சர் போற்றும், சுடர் மணிமகுடவேந்தே!
தங்கப்பொற்கமலபாத, சரணமே சரணம் போற்றி
கங்கணங்கட்டிக் காவில், கனவிலங்களித்ததாலே
எங்கே நாம் போவோமென்று, இயம்பிடவந்தோமையா.

(வ—ம்.) சரணமே, சரணமையா! சருவேஸ பானுக்குஸ்தோத்திரம். எங்கள் பயிர் பச்சையெல்லாம், காட்டில் வாழும் பல மிருகங்கள் தின்று அளிப்பதால், எங்களுக்கு வெகு சஞ்சலமாச்சுதையா சுவாமி.

ராயர் குடியானவர்க்கு விருத்தம்.

சஞ்சலமாச்சுதென்று, சாற்றிய குடியானோரே
அஞ்சிட வேண்டாமிப்போ, அதிவீரருடனே நாமும்
வெஞ்சினமிருகமெல்லாம், விதரிடவேட்டைசெய்வோம்.
தஞ்சமாய் மனைக்கு நீங்கள், தயவுடனேகுவீரே.

(வ—ம்.) அகோ வாரும் குடியானோரே! அநேக வீரர்களோடு வேட்டையாட வருவோம், நீங்கள் உங்கள் பதிக்கு ஏகுவீராக.

அப்படியே போய் வருகிறோமையா சுவாமி.

ராயர் சேவகருக்கு விருத்தம்.

தீர்க்கமாய் நமது வாசல், சிறப்புடன் காக்கின்ற
ஊக்கமே மிகுந்த வீர, உண்மை சேவகரே கேளும்;
தாக்கியே மன்றல் செய்த, தையலாம்அன்னேசாளை
சீக்கிரம் அழைத்துக்கொண்டு, செப்பமாய் வருவீரே.

(வ—ம்.) அகோ வாரும் சேவகரே! நமது மனைவியாகிய அன்ன மாதை அழைத்து வருவீர்களாக.

அப்படியே யழைத்து வருகிறோமையா சுவாமி.

ராயர் தேவி தோற்ற விருத்தம்.

சங்கை நிறைந்திலங்குகின்ற ரோமைராட்ஜியம்,
தன்னை யரசாண்டு செங்கோல் தழைக்கு மன்னன்;
மங்களஞ் சேர்ந்திலங்கு தர்மங்கராஜேந்திரன,
மகபதியாம் அதிபதியின் மனைவியாகி;
தங்கரற்னப்பணிதி மெய்யில் மின்னி ஆர்ப்ப,
சருகைவர்ணத்துயில் சதங்கை கொலுசுநீட,
செங்கையில் பொன் வளசு பின்னக்கு வஞ்சமாட,
செல்வி யென்னும் அன்னேசாள் வருகின்றாளே.

தரு.

பல்லவி. மங்கையாம் அன்னேசகிவந்தாள்—சடையகளில்
மங்கையாம் அன்னே சகிவந்தாள்.

அ. ப. மங்கையாம் அன்னே சாள் வந்தாள்
திங்களின் ஒளியது போல்,
மகத்துவ நயசுய, பவுத்திரமிலகிய
கவுத்தில தொனிருக, மிசைத்து நீடியே
வடிவுற்றிடுமென்னம் பொல், நடையுற்றிடுமுல்லாச
கெடி பெற்றிடுமகுட, முடி பெற்றிடும் ராஜேந்திரன்.

முடுக்கு. தாந்தகுர்த ஜெணு, தீந்திலாணுகிரி
தாங்குடிகுடிகு, தத்திமித்தத்தோம் தோம்
தனித்த தனித்த ஜெணு, தான தான ஜெணு
தத்திமித்தாளமோடு, தித்திமித்வில்முழங்க—மங்கை

1. சிரசில் முல்லை பூமலர் சூடி—செந்தூர வர்ண
திலதம் நெற்றிப் பிறைநுதல் நீடி—சூதகுளம்
காதில் ரத்ன தோடுடன், போற்குவஞ்சமாடி
துலங்கு பவள முற்றிலங்கு மாலைகள்
குலுங்கு வெகு செப விளங்குவஜீகர
சுகிர்தமிலகும் அக, மகிழ்வித செதஷக
சகுர்த சரீரக, பதனிதபமவென—தாந்தகுர்த

2. கொங்கையில் சவா தணிந்து—விளிகட்கு
கோலவர்ணமைகளிட்டு—கூந்தல்களின்
குதித்த சரமது சிறப்பாய் நீடியே
சரித்த மலரின் வாசனத்திலோடியே
சத்திய நெறிதவறு, விஸ்தாரமிகுத்தவிகு
சித்திர மிகுத்த செய, துத்திய வடிவிலகு—தாந்தகுர்த

3. பாதசரங்கொலுசுகீடவே—இருகாலில் தண்டை
பாடகங்கள் துள்ளியாடவே—ருகங்கள்பாடும்
தாதிரதிமாதர் முன்பில், சாந்து மலர் தூவிவீச
சம்பிரம மிருகன, கெம்பீரமிருகண
செம்பவளவாயிதள், ரம்பையெனவரு
தரும நெறிதவறு, நரபதி தருமராயர்
பிரியமாய்மன்றல்செய்த, அரிவையென்னும் ரதியாள்—
தாந்த.

சேவகர்ராக்கினிக்கு விருத்தம்.

கன்னியர்க்கரசே யெங்கள், கதிர்குலத்திறையே போற்றி
வன்னமாம் உனது கஞ்சம், மலர்பதம் சரணம் போற்றி
தென்னவன் தருமராயர், தீவிரமாக உம்மை
நன்னயமாயழைத்தார், நாயகி வாருமம்மா.
(வ—ம்.) சரணமே சரணமம்மா தாயே! எங்கள் ராயர் உம்மை
அழைக்கச் சொன்னார் வாருமம்மா தாயே.
அப்படியே வருகிறேன் சேவகரே.

ராயருக்கு மனைவி விருத்தம்.

வாசமாய் மன்றல் செய்த, மன்னவா யென் பூமானே!
நேசமே நிறைந்த யெந்தன், நிருப என் அரசே போற்றி
ஆசையாய் என்னை உங்கள், அடியினையழைத்த செய்தி
ராசனே எனக்கு இப்போ, நலமுடனருளுவீரே.
வ—ம். சரணமே சரணமையா என் பூமானே! அடியாளையழைத்
த செய்தி திருவுளம் பற்ற வேணுமையா சுவாமி.

ராயர் மனைவிக்கு விருத்தம்.

சுந்தர வதனம் போன்ற, தோகையே சொல்லக் கேளு
மந்திரவதனமோங்கும், மதலையை வளர்த்து அன்பாய்
சிந்தைகள் மகிழ்வதாக, திறமுடனிருந்தே யெந்தன்[ணே.
சொந்தமாமனையில் வாழ்ந்து, சுகமுடனிருப்பாய் பெண்
வ—ம். அகோ வாரும் என் மனைவியே! நமது மகளாகிய ஞான
சவுந்திரியை நன்றாய் பிராமரித்து நடத்திக்கொள்வா
யாக.

ராயருக்கு மனைவி விருத்தம்.

கதிர் குலத்திறையே யெந்தன், காவலா சரணம் போற்றி
மதிபல உரைத்த நீதி, வார்த்தையை மீறிடாமல்
நிதியெனுமகவையன்பாய், நேசமாய்வளர்த்துக்கொண்டு
பதிதனிலிருப்பேனுந்தன், பாதமே சரணம் தானே.
வ—ம். சரணமேசரணமையா என் பூமானே! தாங்கள்சொன்ன
கற்பனையின்படியேநடந்துகொள்ளுகிறேன் என்பூமானே

ராயர் சேவகருக்கு விருத்தம்.

உரிமையுடனெனது அரண்மனையிலென்றும்,
ஊழியம் செய் சேவகரே உரைக்கக் கேளும்;
அருமையுடனெனது மனமகிழ்வதாக,
ஆதரையோர் புகழ்ந்தேற்ற அன்பாய் வாழ்த்த;
பெருமையுடனின்ற மணிவிளக்காமெந்தன்,
பேரொளியை பிரபலத்தை எனது வாழ்வை;

திருவை யெந்தன் பாலகியை வரிசையாக,
சீக்கிரம தாயழைத்து வருகுவீரே.

வ—ம். அகோ வாரும் சேவகரே! நமது குமாரத்தியாகிய ஞானச்சவுந்தரியை யழைத்து வருவீர்களாக.

அப்படியே நல்ல பாக்கியமையா சுவாமி.

———o———

ஞானச்சவுந்தரி அம்மாள் தோற்ற விருத்தம்.

அருணொளிரிலகுபாகதியில் நீடும்,
அமைத்தயேசையாவினருளினாலே;
தரையதனிலுயர் ரோமை நகரையாளும்,
தருமமகாராஜருட் புதல்வியாகி;
சிரசுதனிலலங்கார முடிபுனைந்து,
தேகமதில் பொற்சரிகையங்கி பூண்டு;
வர மிகுந்த ஞானசவுந்தரி யாளென்ற,
மாது கன்னிசபையதனில் வருகின்றேமே.

———

தரு.

பல்லவி. ஞானச்சவுந்தரியும் நானே—மகராஜரீன்ற
ஞானச்சவுந்தரியும் நானே.

அ. ப. ஞானச்சவுந்தரி நான், பானிறைனியதுபோல்
நாதரின் பதமதை, யோதியே யனுதினம்
நீதமுடனே துதி, தாதகமாய் நீடிய—ஞான.

1. சிரசில்லளகுமுடிதுலங்க—ஒளியிலங்க
சிறப்பாயுடையது யிலங்க—புகழ் விளங்க
வரிசையாய் மார்பில் ரற்ன, மாலைச் சரங்குலுங்க
வஜிகாமிலகிய பரம மோட்சாதிப
வரம்நிறை சருவதற்பரனையே போற்றியே—ஞான

2. பக்தி விசுவாசமே தேர்ந்து—மனதாராய்ந்து
பரிசுத்த தேவ சிநேகம் கூர்ந்து—கதிநினைந்து
நித்திய தற்பரனை, நிதமும் நமஸ்கரித்து
நிமலனை யீன்றிடும், தவ நிறைகன்னிமரி
சாணினையனுதினம் ஜெப மதிலோதியே—ஞான

சீர் நிறை ரோமை ராட்ஜியமாளும் —தருமராயர்
ஜெகத்தினிலீன்ற புதல்வியாளும்—பாலகியாளும்
யேர்நிறையேசையாவின், இருதாள்பணிந்திறைஞ்சி
இச்சை பாகதி, நட்செயலாய் பெற
அச்சமதன்றியே அகமதில் நினைத்திடும்—ஞான

———

சேவகர் அம்மாளுக்கு விருத்தம்.

அற்புத வரம்பெற்றோங்கு, மளகுசேர்ந்திலங்கும்நேச
கற்புருவிர்த்தியான, கன்னியாம் சவுந்தரியே!
இப்புவிமீதிலும்மை, ஈன்றிடும் தருமராயர்
நற்புகழாயனைத்தார், நாயகி வாருமம்மா.

வ—ம். சரணமே சரணமம்மா தாயே! உங்களைப் பெற்ற பிதா வானோர் அழைக்கச் சொன்னார் வாருமம் மாதாயே.

அப்படியே வருகிறேன் சேவகரே.

———

ராயருக்கு அம்மாள் விருத்தம்.

பொன்னொளிபோலேயென்னை,இப்புவிதனிலீன்றெடுத்து
அன்னம்போல்வளர்த்தயெந்தன்,ஐயாவேசரணம்போற்றி
சின்னப் பாலகியையுங்கள், சேவடி அழைத்தபுத்தி
இன்னதென்றறிய யிப்போ, இயம்பிடவேணுமையா.

வ—ம். சரணமே சரணம் என் பிதாவே! அடியாளை உங்கள்சமுகத்தில் அழைத்த காரியம் திருவுளம்பற்ற வேணுமையா யென் பிதாவே.

———

ராயர் மகளுக்கு விருத்தம்.

பரிவுடனெனது செல்வ, பாக்கியம் எனவே வந்த
வருங்குயில்மொழிசேர்ஞான, மகவே நீ சொல்லக்கேளு
அரியினை வேங்கைவேட்டை, யாடவேபோறேனெந்தன்
தெரிவையுன் இளையதாயார், செயல்ப்படிநடப்பாயாக.

வ—ம். அகோவாரும்என்னருமைக்கண்மணியே!நான்வேட்டைமார்க்கம்சென்று வருமளவும், உன் சிறியதாயார்சொல்ப்படி கேட்டுமாளிகையில்சுகமே வீற்றிருப்பாய்மகளே.

ராயருக்கும் மகளுக்கும் தற்கத்தரு.

மகள். ஆதரையில் என்னையன்பாய்
ஆசையுடன் பெற்றெடுத்தபிதாவே—யானும்
மாது சிறு புதல்வி யல்லோ
மயங்கி மனம் கலங்கிடுவேனையா.

ராயர். மயங்குவேனென்றே யுரைத்த
மகளே ஞானச்சவுந்தரியே கேளு—மனம்
கலங்கிடாமல் சிறிய தாய் முன்
கையளித்துப் போவேனெந்தன் மகளே.

ம. கையளித்துப் போவேனென்றீர்
கஸ்தியுற்று எனைப்பெற்ற தாயல்லவே—அற்ப
காதலியோர் குற்றம் செய்தால்
எது விதம் செய்வாளோ என் பிதாவே.

ரா. எது விதம் செய்வாளோவென்
றியம்பிய யென் கண்மணியே மகளே—ஒரு
இடஞ்சலொன்றும் செய்யாமல்
இளைய தாயார்க் குரைத்திடுவேன் மகளே.

ம. உரைப்பதிலுலென்ன ஐயா
ஒரு வகையுமறியாத பாலகி நான்—என்னை
ஒப்புவித்துப் போவேனென்றீர்
சிற்பகியாளேது செய்வேன் பிதாவே.

ரா. என்ன செய்வேனென்று யென்முன்
ஏக்கமாய்க் கண்ணீர் சொரிந்தாய் மகளே—உன்னை
ஏறிட்டு நான் பார்த்தவுடன்
ஆராக நீர் பெருகுதே யென் மகளே.

ம. என் மகளே யெனவுரைத்தீர்
இளைய தாயார் எனையே கோபித்தடித்தால்—அப்போ
ஏக்க முற்று உமை நினைத்து
ஏங்கி அகம் சோர்ந்திடுவேனையா.

ரா. ஐயா வென்ற யென் மகளே!
அடித்து வசைபேசி கோபியாமல்—இளைய

அன்னையிடம் சொல்லியானும்
கண்மணியே போய்வாறேன் மகளே.

ம. கண்மணியென்றே பகர்ந்து
கருதும் யெந்தன் தந்தையரே பிதாவே—இப்போ
கருத்துடனே வேட்டையாடி
திறத்துடனே போய் வருவீரையா.

ரா. போய் வருவேன் சீக்கிரத்தில்
பொன்னின் ஞானச்சவுந்தரியே மகளே—நீயும்
புத்திபோலே தானடந்து.
கர்த்தரையே துதித்திருப்பாய் மகளே.

ம. கர்த்தாவை துதித்து உங்கள்
கற்பனையின்படி நடப்பேனையா—நீரும்
கருத்துடனே சிறிய தாயார்க்
குரைத்து யிப்போ போய் வருவீரையா.

வ—ம். அகோ வாரும் யென்னருமைக் குமாரத்தியாகிய ஞானச்சவுந்தரியே! நான் உன் சிறிய தாயாரிடத்தில் பேசி வருமட்டும் சுகமேயிருப்பாயாக.
அப்படியே யிருக்கிறேன் யென் பிதாவே.

ராயர் மனைவிக்குவிருத்தம்.

வஞ்சியர்க்கரசேயெந்தன், மனைவியே சொல்லக்கேளு
வெஞ்சின மிருகமெல்லாம், வேட்டைகளாடவே தான்
இன்சொல்லால்போறேனெந்தனியல்பெருமகளைவைத்து
தஞ்சமாய்மனையில்வாழ்ந்து, தயவுடனிருப்பாய்பெண்ணே.

ராயருக்கு மனைவி விருத்தம்.

தயவுடன்பொறுமைதாட்சி, தருமமேநிறைந்தென்கோவே!
செயலுடனகரிதேசம், சீர்மைகள் பார்க்க வென்றீர்
தயவதாயெனக்கோர்வார்த்தை, சாற்றிட ஒருவர்காணேன்

கயமனைக்காவில் வேட்டை, கடுகியேயாடிவாரீர்!

வ—ம். சரணமே சரணமையா யென் பூமானே! அடியாளும் மகளும் தனித்திருப்பதால்சீக்கிரம்வேட்டையாடி வருவீரையா யென் பூமானே.

தற்கத்தரு.

ராயர். மின்னுங்கதிரொளி மடமயிலே,
வேந்தர் மறைவினிலேந்திளியே!
பன்னுங்கிளி மொழி மடவாரே,
பாவையே யெந்தனுர முர்தே!
பொன்னின் கிரிபல நாடனைத்தும்
போற்றும் புகழ் நகராலயமும்,
தென்னன் பண்ட சூழதேசமெல்லாம்,
சென்று வருவேனென்தேன் மொழியே.

மனைவி. சென்று வரவேணு மென்றுரைத்தீர்
சேர்ந்தபதிகளுமாய்த்துணர,
இன்று நீரேகி வருமளவும்
ஏற்கையுடனெனக் காதரவார்,
மன்றல் புரிந்தயென் பூமானே!
மலையில் மிருகமெல்லாம் வதைத்து,
வென்றியே கர்த்தனருளாலே
வேட்டையாடியே வருவீரையா.

ரா. வருகுவீரென்று தானுரைத்தாய்,
மங்கையேமடமயிலனங்கே!
அருமையாக நானீன்றெடுத்த
அளகு நிறைஞானச் சவுந்தரியை,
கொடூரமாகநீகோபியாமல்
குழந்தை தனையும்வைத்தாதரித்து,
சரியாயனுதினம் தீன் கொடுத்துன்
சந்ததி போலே வளர்த்திடுவாய்.

ம. சந்ததிபோலாதரியுமென்று,
சாற்றிய யெந்தன் பூமானே!

25

எந்தன் வயிற்றினில்ப் பிறந்ததுபோல்,
எப்போதுமெந்தன் பக்கம்வைத்து;
அந்திசந்தியும்ஸ்நானம் செய்து,
அருமையாய் நல்ல தீன் கொடுத்து;
கொத்து கூந்தலை சீவியன்பாய்,
கொண்டுநடத்துவேன் மன்னவனே.

ர. அன்பாய் நடத்தியே வருவேனென்ற,
அரிவையே அன்னேசகியே!
என் பாலகி ஞானச்சவுந்தரியாள்,
இடறுய் ஒரு குற்றஞ் செய்தாலும்;
கெம்பி நீயொன்றும்பேசாமல்,
கெவுர்த்தியாகவே தானிருந்து;
பண்புடன்வைத்து வளர்த்திடுவாய்,
பாலகியை யென் பெண்ணரசே!

ம. பெண்ணே யென்று நீர் மறுக்லிப்பாய்,
பேசுகின்ற யென் பூமானே!
அன்னீதம் மகள் தனக்கெண்ணினால்,
ஆண்டவர்க்கோர்த்துரோகமல்லோ;
தன் நிகரில்லார்க் கேற்றிடுமோ,
சத்திய திருச்சபைக்குகந்திடுமோ;
இன்னம்நீங்கள் யோசிக்கவேண்டாம்,
ஏகிவருவீரென் மன்னவனே.

ராயர் மனைவிக்கு விருத்தம்.

ஏகியே வருவீரென்று, இயம்பிய பெண்ணேகேளு
போகமாய் நாமுஞ்சொன்ன, புத்திகள் போல்நடப்பாய்
வாகுடன் பெற்றெடுத்த, மகளையுன்கையளித்தேன்
ஆகமேபிரியமுற்று, அரண்மனைக்கேகுவாயே.

வ—ம். அகோ வாரும் யென்மனைவியே! நான் சொன்ன கட்டளையின்படியேநடந்து கொண்டுமாளிகைக்குப்போவாயாக.

ராயர் சேவருக்கு விருத்தம்.

நேசமாய் நமது முன்பில், நீடியேயேவல் செய்யும்
தேசராஜாக்கள் மெய்க்கும், தீரசேவகரே கேளும்
வாசமாய் மலைக்குவேட்டை, மனமகிழ்ந்தாடவேணும்
காசினிமீதில் வேட்டைக், காரரையழைத்துவாரீர்.

வ—ம் அகோ வாரும் சேவகரே! நாம்வேட்டை மார்க்கம்போக வேண்டும், ஆகையால் வேட்டைக் காரரையழைத்[து வரு]வீராக.

அப்படியே யழைத்து வருகிறேனையா சுவாமி.

வேட்டைக்காரர் விருத்தம்.

தலைதனில்ப்பாவுங்கட்டி, சந்தனப்பொட்டுமிட்டு
நலமுடனுடையணிந்து, நறுக்குவாளம்புகொண்டு
பெலமுடன் தருமராயர், பிரியநற்சமுகங்காண
கலகலென்றாடி வேட்டைக், காரரும் தோன்றினோமே.

தரு.

1 சிரசினில்த்தலைப்பாவுங்கட்டி,
சிறந்த உடைகளேற்றியே
வரிசையாகவே வேட்டைக்காரர்,
மங்களமாகவே தோன்றினார்.

2. காடிபுலிமான்கடுவாய்ஒனாய்,
கதித்தமான்கலையாவையும்;
விரடக்குண்டதால் முறித்து நீடும்,
வேட்டைக்காரரும் தோன்றினார்.

3. கையில்வில்லுடனம்பு கேடயம்,
கத்திகிரிசுவாளுடன்;
வெய்யவேதானிமையில்சேர்த்து,
வேட்டைக்காரரும் தோன்றினார்.

4. பிச்சுவலையும் பாச்சுவலைகள்,
விரட்டுமே நச்சுவலையுடன்;
மீட்சையுடனேயெடுத்துக்கொண்டு,
வேட்டைக்காரரும் தோன்றினோர்.

 329-1-89

சேவகர் வேட்டைக்காரருக்கு விருத்தம்.

மெய்யுடன் ஒண்ணலர்கள், விருதுகள்பரித்துநீடும்
விற்புறுவேட்டைக்காரர், விளம்பிடக்கேளுமிப்போ
இப்புவியரசர்கோமரன், யிச்சணமுங்களைத்தான்
செப்பமாயழைக்கச்சொன்னார், சீக்கிரம் வருவீரே.

வ—ம். அகோ வாரும் வேட்டைக்காரரே! எங்கள் ராயர்உங்களை யழைக்கச்சொன்னார் வருவீராக.

அப்படியே வருகிறோம் சேவகரே.

வேட்டைக்காரர் ராயருக்கு விருத்தம்.

மணிமுடி துலங்குமெங்கள், மன்னவா சரணம்போற்றி
கெணிதமாய்ச்செங்கோலொச்சும், கீர்த்திசேர்துரையேபோற்றி
அணிவுடனெங்களைத் தான், அவசியமழைத்தசெய்தி
நினைவுடனின்னதென்று, நிகழ்த்து வீர்சரணம்தானே.

வ—ம். சரணமேசரணமையா சுவாமி, அடியோர்களையழைத்தகாரியம் திருவுளம்பற்றவேணுமையா சுவாமி.

ராயர். நாம் வேட்டைமார்க்கம் போகவேணும், ஆகையால் மந்திரிசேவகருடனேநீங்களும் கூடவேட்டைக்குவருவீர்களாக.

அப்படியே வருகிறோமையா சுவாமி.

வேட்டைக் காரர் தரு.

பல்லவி. சாரியிதோவாரார்-தருமராயர்-சாரியிதோவாரார்.

அ. ப. வீரியமாய் வனவேட்டைகளாடிட-சாரியிதோ.

(1) தம்பூர்தவில்முரசு, தாளமுளங்கவே
தடதடெனவே வெடி, பீரங்கியதிரவே
வம்பர்நடுநடுங்க, மகிழ்வாய்க் கட்டியங்கூற
மன்னன் தருமராயர், திண்ணமுடனடந்து—சாரி

(2) கடுவாய்புலிமான்மரை, கலந்து நின்றோடவே
காட்டிற் புலி கரடி, கலந்துகுகைநீடவே
திடமாய்ப்பல மிருகம், சேர்படைகூடவே
ஜெகபதி தருமராயர், மனமகிழ்வாகவே—சாரி.

(3.) பட்சிபறவையினம், கூக்குறல் கூவுதே
பாடிடும் வண்டினம், கூடிசைபாடுதே
நட்செயலாய்ச்சற்ன், மகுடமுடிபுனைந்த
நரபதி தருமராயர், பிரியமுடனிப்போது—சாரி

ஆரம்ப விருத்தம்.

தென்னவன்தருமராயர், சிர்மைகள் பார்க்கவேதான்
முன்னமேயகன்றபின்பு, மொய்குழலிளையாள்ஞானக்,
கன்னியைக்கருதி நெஞ்சம், காவலன் வருமுன்னாக
இன்னிலத்திளையாள்செய்த, யிடரினிகூறுவேனே.

வ—ம். அகோதெப்படியென்றால், தருமராயர் வேட்டைமார்க்கம் சென்றபின், அங்கேசாள் ஞானச்சவுந் தரிக்கு தீவினை நினைக்கிறதாக.

அங்கேசாள் மகளுக்குவிருத்தம்.

தந்தையரேகும்போது, தையலேநீயுங்கூட
விந்தையாய்த் தேசம் பார்க்க, விதமுடனேகிடாமல்
இந்தரண்மனையிலுன்னை, யிருத்தினார்ராயர். தானும்
உந்தனுக்கேவல் செய்ய, ஊழியக் காரி நானே.

வ—ம். அகோ வாடிபொல்லாத வஞ்சகியே! உன்னுடைய பிதாவின் கூடப் போகாமல், இங்கேயிருந்து சுகிக்கலாமென்றிருக்கிறாய், இப்போதுதலைவாசல் விட்டப்புறம் போவாயாக.

தாயாருக்கு மகள் விருத்தம்.

அய்யகோதாயேநீயும், அகலவேபோகச்சொன்னாய்
வையமீதன்னையாகும், மகவுநானல்லோதாயே

மெய்யெனத்துணைநீயல்லால், வேறொருதுணையுங்காணேன்
செய்யதோர்பானுக்காக, சிறந்தென்னைக்காரும்தாயே.

வ—ம். சரணமே சரணமம்மா தாயே! என்னுடையபிதாவின் கட்டளைப்படியேஎன்னை ஆதரித்துக்கொள்வாயம்மா தாயே.

தற்கத்தரு.

அ. தாயேதாயேயென்று, தற்கமாய்ப் பேசுகிறாய்
வாயால் கூறினாலினி, மரியாதைபோமே.

ம. மரியாதைபோமென்று, வசனங்கள் பேசாதே
எதிராளிநானுனக், கியல் வல்ல தாயே.

அ. இயல்வல்லதாயென்று, இனியமொழிகள் சொன்னாய்
பயிலல்லோ நீ மெத்தப், பாசாங்குக் கள்ளி.

ம. கள்ளி நீ யென்றென்னைக், கருதவேண்டாம் தாயே
பிள்ளைநானுனக்கல்லோ, பிரியம்வைத்தாள்வாய்.

அ. பிரியம்வைத்தாளநான், பெற்றபிள்ளையோ நீயும்
அருமையெனக்கு நீயோ, ஆரடிபோடி.

ம. ஆரடியென்றென்னை, அசங்கிதம்பேசாதே
பேராலே நானுந்தன், பிள்ளைகண்டாயே.

அ. பிள்ளை யென்று நீயும், பேசுவதேதடி
கள்ளத்தனங்களிது, காரியமாமோ.

ம. படுநீலமென்றென்னை, பகரலாமோதாயே
யிடர்கள் செய்வதற்கு, யெதிராளியாமோ.

அன்னேசாள் மகளுக்கு விருத்தம்.

எதிராளியாமோவென்று, யியம்பிய பொல்லா நீலி [ராய்
வதில் மொழிபேசினாலுன், வாயைநான் கிழிப்பேன்பா
குதிகாலால் மிதித்து உன்னை, கொடூரங்கள் பலது செய்
இதமுடன் வாசற் கப்பால், எகியேஓடிப்போடி. [வேன்

தற்சத்தரு.

ம. யேகியே போடி யென்று—என்முன்பி
வியம்பிய மாதவே—யிப்போ
வேக முற்றால் சிறு, பாலகி பொறுப்பேனோ
விதற்பஞ் செய்யாதேயம்மா.

அ. அம்மாவென்றெனைப் பேசாதே—பொல்லாத
அனியாய வஞ்சகியே—இப்போ
விம்மி யுன் சிரசினிற், குட்டுவேன் தலை வாசல்
விட்டோடிப் போ நீலி.

ம. குட்டியுதைத்திரம்மா—என்தாயே
கொடூரங்கள் செய்திரம்மா—என்னை
பட்சமாய்ச்சேர்த்து யென், பசியை யகற்றும்திவ்விய
பானுக்குத் தோத்திரமம்மா.

அ. தோத்ரமெனப்பணிந்தாய்—பொல்லாத
துரோக பாதக நீலி—என்னைப்
பார்த்து அழுதாலுந்தன், முகத்திலறைந்திடுவேன்
பளிகாரி யெட்டப் போடி.

ம. முகத்திலறைந்திரம்மா—யென்தாயே
முதுகிலிடித்திரம்மா—யிப்போ
பகைத்துச் சினந்தாலற்ப, பாலகி பொறுப்பேனோ
பட்சமாய்ச் சேருமம்மா.

அ. பட்சமாய்ச் சேர்ப்பேனோடி—மூதி நீ
படும்பாடு ரொம்பவுண்டு—உன்னை
நிட்சயமாயிப்போ, கொல்லுவேன் தலை வாசல்
விட்டோடிப் போ நீலி.

அன்னேசான் விருத்தம்.

தலைதனி ரண்டு கொண்ட, தரித்தவரிடத்தைப்போல
மலைநிக ருஜர்நாட்டில், மன்னவரிருவராமோ
நிலையென்று யெனையும் ருஜர், நிறுத்தியேயிருவர் தம்மை
பலவிதம் பேச வைத்த, பலனினி யரிவேனையோ.

அம்மாள் இன்னிசை.

அன்னையே ஆயே! அமைத்த கருணாகரியே!
பன்னிருவருக்கினியே! பாவிகளுக் காயிரங்கி,
முன்னும் வெல்லை மாநகரில், மோசமா யேசுவை நீர்
இன்னிலத்தி லெங்களுக்கா, யீன்றெடுத்த மாதாவே!
ஞானப் பரஞ்சுடரோ! நானிலமுமீடேற,
வானபரனின் துயரை, வசனிக்கக் கூடாதே.
உன்னுடல்பொறுக்கடிறு, உறுகொடியாள்செய்துயரால்
நானுள மிகவாடி, நலமிளந்தேனென் பரனே.
அய்யா மறு தேசம், யாத்திரையே போன பின்பு
பையமறுதாய் புரிந்த, பாதகத்தை நீரறிவீர். [னே
வெயிலிலெண்ணெ போலவேதான், மெய்யுருகிவாடுறே
வைய மீதிலென்னையும்நீர், மனமிரங்கிக் காருமம்மா.

அம்மாள் துயரத்தரு.

மரியமாதாவே—தேவ--மரியமாதாவே—அர்சிஷ்ட
மரியமாதாவே—யெந்தன்—மரியமாதாவே.
தந்தை யேகவே—சிறிய—தாயிடமாகவே
நிந்தையாகவே—அவள்--சிந்தை நோகவே.
அடித்து வசை பேசி—முடி--பிடித்து உதைத்ததால்
மடித்தலாகுதே--அற்ப--மதனை யென்ன செய்வேன்.
என்ன செய்வாளோ—இனி--யேது செய்வாளோ
இன்னும் யானறியேன்--அற்ப--கன்னியைக் காருமம்மா.
தேகம் நடுங்குதே—ரத்தம்—சிதறிப்பாயுதே
மதிமயங்குதே—அற்ப--அடியாளைக் காருமம்மா.
என்னைப் பயின்றவள்—இந்த—அநீதம் செய்வாளோ
கன்னி யென்மனது--வெகு—கஸ்தியாகுதையோ.
பாதகியிடத்தினில்—என்—பிதாவுங் கையளித்தார்
ஓதூரவடித்து--ரத்தம்—சிதறச் செய்தாளையோ!
விளிகள் மருளுதே—தூக்கம்--மருட்டி வருகுதே [வேன்
தெளிவாய்சப்பிரமஞ்ச—மதில்--நலமாய்நித்திரை செய்

அம்மாளின்னிசை.

தற்பரனைப் பெற்றெடுத்த, தாயே யென்மாதாவே!
சிற்பகியா ளேது செய்வேன், சிறிய தாயாரென்னையுமே
சற்பணையாய்த் தானடித்தாள், சரீரம் ரத்தமாகுதையே
நிற்பாமாய்க் கட்டில் மிசை, நித்திரை செய்யப் போடே
னையோ

வ—ம். பரம கடவுளாகிய சருவேஸ்பரனைப் பெற்ற தேவ
மாதாவே தாயே! இது வேளை இது தருணம் பாலகிக்
குதவி செய்வாய் தாயே.

அங்கேசாள் விருத்தம்.

அய்யகோ பதறுதுள்ளம், அரசர்தானறிந்தாராகில்
வையகமதனிலென்னை, வதைத்திடச் செய்வாரையோ
தையலைக் குலைகள் செய்ய, தாணியோரறியா வண்ணம்
செய்யவோ வதைக்கச் சொல்ல, திடமுள்ளோராருங்
காணேன்

துயரத்தரு.

1. அய்யய்யோ நான் என்ன செய்வேன, அங்கம் நோகுதே
அங்கம் நோகுதே—மனம்—தியங்கலாகுதே.
2. எய்து யென் பூமானிருந்தால், இடர்கள் செய்வாரே
இடர்கள் செய்வாரே—வாளால்—கொடிது செய்வாரே.
3. சவுந்தரியும் தானிருந்தால், தவறு சொல்வாளே
தவறு சொல்வாளே—பூமான்—துயர்கள் செய்வாரே.
4. பவந்தமாய்க் குலை புரிந்தால், பதியை யாளலாம்
பதியை யாளலாம்—ராக்கினி—மதியாய் வாளலாம்.
5. பெற்ற தந்தை வருமுன்பாக, நிஷ்டூரம் செய்வேன்
நிஷ்டூரஞ்செய்வேன்—அவர்முன்—துஷ்டப் பொய்
சொல்வேன்.
6. இஷ்டமுடன் காலில் வீழ்ந்து, ஏக்கமாகுவேன்
ஏக்கமாகுவேன்—மன—திரக்கமாகுவேன்.
7. பாலகி முன் சென்றவுடன், பதறு தங்கமே
பதறு தங்கமே—கைகால்—உதிறு தெங்குமே.

8. சாலோபமாய்க் கொல்ல புத்தி, சாற்றிடக் காணேன்
சாற்றிடக் காணேன்—ஒருவர்—தேற்றலைக் காணேன்.

எத்துப் பேய்கள் தரு.

1. அய்யய்யோ பெண்ணே, அருமாந்த புத்தியிதானு—ஒரு
அற்ப மனதிலதைப்பற்றி நீ தியங்காதே.
2. வையகம் தன்னிற் குளந்தை கடிய உறக்கம்—ஒரு
வஞ்சகமன்றி குலைகாரர் கையினிலளிப்பாய்.
3. அறுக்கக் குலைகாரர், தப்பவிடாமலே தானே—கெதி
ஆத்திரமாய்ச் சொல்லி, மீத்திரமாகவே கொல்லும்.
4. சுருக்காகச் சொல்லுன், திறத்தையும் நாங்களறிய—உன்
துடுக்கை மறந்து, நடத்தவும் சோம்பற்படாதே.
5. பாரிற் குளந்தைகள் செத்தாலது பாவமில்லை—யிந்தப்
பாலகி மண்ணிலிருந்தாலுனக்கிது தொல்லை.
6. சீரிட்டுப் போட உனக்கு பயமிருந்தாறல்—நாங்கள்
திடமாயுன்னோடே, கிட்டவே நிற்கிறோம் வாடி.
7. வாடி வலை வீசியும் மீன் பிடிக்காமற் போகாதே—உந்தன்
வல்லமைக்கிது, நல்லதோர் நிறம் சொல்லு.
8. கோடாதே பெண்ணே, குலைசெய்தாற் சொர்க்கங்கிடை
க்கும்—யிப்போ
தாடாண்மை பேசாமற், சந்ததியைக் குலை செய்வாய்.
9. நாடதிலெத்தனை பேர் குலை செய்தவரிப்போ—இந்த
நாட்டினிற் கீர்த்திபெற்றோங்கித் தழைக்கிறார் பெண்ணே.

அன்னேசாள் விருத்தம்.

அன்புடன் நீங்கள் சொன்ன, ஆறுதல் மொழிகள் கேட்டு
பண்புடன் பாலகியை கொல்ல, பாரினில் மனதாகினேன்
இன்புடனுங்களுக்கு, இயல் பெரு பூசை செய்வேன்
தண்புடன் நீங்கள் வாழும், தாணி தனக்கேகுவீரே.

வ—ம், ஆகட்டும் நீங்கள் சொன்ன புத்தியின்படியே செய்ய மன
தாகினேன், உங்களுக்கு வேண்டிய பூசைநைவேத்திய

முதலானதும் செய்வேன், ஆகையால் நீங்கள் வாழும்
உங்கள் பதிக்கு யேகுவீராக.

அன்னேசாள் சேவகருக்கு விருத்தம்.

மண்டலத்தரசர் போற்றும், மகிழ்தர் மராயர் முன்பு
கண்டு மேபுகள்ச்சி கூறும், காவலர் பகரக்கேளும்
தண்டிலை நகரி காக்கும், தலையாரிமார்கள் தன்னை
விண்டு நீரவரைக்கூவி, விரைந்து யிங்ஙனே மேவாரீர்.
வ—ம். அகோ வாரும் சேவகரே! நமது நகரி காக்கும் தலையாரி
மார்களை யழைத்து வருவீர்களாக.
அப்படியே யழைத்து வருகிறோமம்மா தாயே.

தலையாரிகள் தோற்ற விருத்தம்.
சித்திரத் தலைப்பாக்கட்டி, செந்தூரத் திலதம் தீட்டி
கத்தி வாள் கிரிசு அம்பு, கரமதிற் பிடித்து அன்பாய்
குத்திடும் ஈட்டி வேலும், குளல் வெடி குண்டு மேந்தி
நித்துவ வீரரான, தலையாரி வருகின்றோமே.

தரு.

பல்லவி. சங்கை நிறை ரோமை ராட்ஜிய, தலையாரிகள் நாமே.
அ. ப. மங்களம்சேர் தருமராயர், மனமகிழுங் குணமேவிய—சங்
1. சிரத்தில் தலைப்பாவும் நல்ல, கரத்திலம்பு மேவும்
விருத்தியுடனுடையணியும், விகசித்ர தலையாரிகள் நாமே
—சங்
2. மெய்யில் சவாதணிந்து நல்ல, ஒய்யாரமாய் நடந்து
பையில் குண்டு மருந்து கொண்டு, பெய்யுந் தலையாரிகள்
நாமே—சங்.
3. வாள்கள் சமுதாடு ஈட்டி, வழமாயிடை சேர்த்து
நீளும் தருமராயர்வாசல், நேச தலையாரிகள் நாமே—சங்

சேவகர் தலையாரிகளுக்கு விருத்தம்.
திங்கள் வெண் குடைகள்சூழும், தென்னவன் தருமராயர்
தங்கப் பொற் கிரிகள் காக்கும், தலையாரிமாரே கேளும்

மங்களத் துயர்ந்த நீதி, மன்னவன் தேவியார் தான்
உங்களையழைத்து வாவென், றேதினர் வருகுவீரே.
வ—ம். அகோ வாரும் தலையாரிமாரே! நமது ராயர் மனைவி உங்
களை யழைக்கச் சொன்னார் வருவீராக,
அப்படியே வருகிறோம் சேவகரே.

தலையாரிகள் அம்மாளுக்கு விருத்தம்.

ஆவலாய்த் தரும ராயர், அரண்மனை தன்னில் வாழும்
காவலர்க்கரிசியான, கருணை கரி சரணம் போற்றி
ஏவலான இந்த, எளியரை யழைத்த செய்தி
தீவிரமாகச் செப்ப, திருவுளம் பகருவீரே.
வ—ம். சரணமே, சரணமம்மா தாயே! அடியோர்களை யழைத்த
செய்தி திருவுளம் பகர வேணும்ம்மா தாயே.

இராக்கினி தலையாரிகளுக்கு விருத்தம்.
நாற்றிசை நகரி தேசம், நலமுடன் காவற் காத்து
சாற்றிய யேவல் செய்யும், தலையாரிமாரே கேளும்
காற்றிரமான மஞ்சம், களிப்புடனெடுத்து யின்று
வீற்றவருயிரை வாங்கி, யிருகர மறுத்து வாரீர்.
வ—ம். அகோ வாரும் தலையாரிமார்களே! இந்தக் கட்டிலிற்
படுத்திருக்கிற குழந்தையை ஆரணியமான வனத்திற்
கொண்டு குலை செய்து யிருகரத்தையு மறுத்து வந்தால்
உங்களுக்கு வேண்டிய ரொக்கம் தருவோம், சீக்கிறம்
கொண்டு போவீர்களாக.
அப்படியே நடப்பித்து வருகிறோமம்மா தாயே.

தலையாரிகள் விருத்தம்.
தாட்டிகன் தருமராயர், தலைவிதானுரைத்த வார்த்தை
கேட்டு நாமெடுத்து வந்தோம், கிளிமொழி தன்னைக் கூவி
கோட்டியாய் வதைகள் செய்து, கொடுங்கர மறுக்க மாது
தீட்டிலை மொழி தப்பாமல், சிதைத்திட வருகுவீரே.

ஆரம்ப வசனம்.

அதெப்படி யென்றால் ஞானச்சவுந்தரியைக் குலை புரிய தலையாரிகள் வாளை யுருவுகிறபோது ஞானச்சவுந்தரி முளித்துப் புலம்புகிறதாக.

அம்மாளின்னிசை.

அண்ணரே! சகோதரரே! அன்புநிறை பிரவிகளே! [வந்தீர்
உன்னி யென்னைக் குலை புரிய, உயர் வனத்திற் கொண்டு
புண்ணியமா முங்களுக்கு, பொறுதியுள்ள பிரவிகளே
இந்நிலத்தி லென்னுயிரை, இது சமயங் காத்தருள்வீர்.
என்ன செய்வேனேது செய்வேன், என்னுடைய சகோ
கன்னி நானுங்களுட, காலைப் பிடித்தேனான்; [தரரே
அன்னிதம் செய்யாமல், ஆண்டவர்க்காய் நீர் பொருத்து
என்னுயிரைக் காப்பாற்றும், என்னேச பிரவிகளே.

வ—ம். அகோ வாருங்கோ! உங்கள் கூடப்பிறந்த சகோதரியென்று மனதிலெண்ணி, பரம கடவுளாகிய சருவேஸ்பரனின் முகத்தைக் குறித்து, என்னைக் குலை செய்யாமல் இது தருணம் காப்பாற்றி உதவி புரிவீர் என் பிரவிகளான சகோதரரே.

தலையாரி விருத்தம்.

அன்றியும் ராஜர் தேவி, அலங்காரி யுரைத்த வார்த்தை
நன்றென நாமுங்கேட்டு, நற்றியே ஓடி வந்தோம்
தன்பமே நிறைந்த ஞான, சவுந்தரிமாது தன்னை [டேன்.
என் மனந் துணிந்து யானும், இடராக வதைக்க மாட்

தலையாரிகள் தர்க்கத்தரு.

தம்பி. வெற்றிமுடிதரித்த-ஜெய; வேந்தர் தனாதர்மராயரவர்
பக்தியுடனீன்ற-ஞானப்; பாலகி தன்னைப்பவுஷளித்து
குத்திரமாகவேதான்-பாவி, கொன்றுவிட நம்மை விண்டினால்
வெற்றியுடனேவந்தோம்-நாங்கள்-வெட்டுவதில்லை விடுவோம்
சண்டர்

அண்ணன். விடுவோம் நாமென்று சொல்லி-நல்ல-மேன்மையுரைக்
கின்ற தம்பியரே

கொடுமை யிதுவாகும்-ராஜ-கொற்றவற்கோக் கொடும் பாவம்
படுமே நமக்கிது தான்- ஞானப்-பாலகி தன்னைப் பவுசுடனே
சந்தி முகம் பார்த்து-இது-தர்மமில்லை யென்று தானறிவீர்.

த. நில்லையென்ற சொன்னாலும்-நமது-நீதிமுடிமன்னர்தேவியர்தான்
குலை செய்யயிப்போது-நம்மை-கூவியனுப்பினாள் கோதையரும்
மலைவாயிருப்பதென்ன-அந்த-மாபாவி நம்மையுங்கொன்றிடுவாள்
வலையிற்படு மான்போல்-நீங்கள்- மயங்கிற வாரது சரியாமோ.

அ. தலையையறுத்திடவே-அந்த-சண்டாளஅந்நேசாள் விண்டாளையோ
கலைசேர் முகவதன-ஞானக்-கன்னி கரத்தைக்களைந்திடவே
இலகும் புவியதனில்-நீரும்-இன்பமுடனே மன மகிழ்ந்தீர்
சிலைசேர் நுதல் விளியை-இப்போ-தீது புரிந்திடவேண்டாம் நீர்.

த. தீது புரிய வேண்டா-மென்று-செப்பிய அண்ணே யிப்புவிமீதில்
காதலாய் ராக்கினியும்-அவள்-கற்பித்த செல்லைக் கடந்தாக்கால்
சேதமுடனமது-உயிர்-தேகமதனைச் சிதைத்திடுவாள்
மாது சரமறுத்து-அவள்-வார்த்தைப்படியே வதையுரைப்போம். [யரே.

அ. உரைப்போம் நாமென்று சொல்லி - வெகு-உண்மையுடன் பகர்தம்பி
தரைக்குள்ளரிவையரில்-உயர்-தையலாள்ஞானச்சவுந்தரியாள்
மனைக்குள்ளுலகாள—நல்ல-மாதரசான மடமயிலை
குரைக்கக் குலைசெய்யாமல்-நாமும்-கூண்டுகரத்தை யறுத்திடுவோம்.

ஆரம்ப விருத்தம்.

என்றுதானிருபேரும், இறையவன் தேவி சொல்லை
நன்றெனக் கடந்திடாமல், ராக்கினி கரங்கள் தன்னை
அன்றுதானறுத்துப்போக, அவர் நினைத்திருக்கும் வேளை
சென்றுதானெஸ்தூர் மன்னன், திரள் படைவாரதாமே.

வ—ம். அதெப்படி யென்றால் ஞானச்சவுந்தரியம்மாளை சேவகர் வனத்திற் கொண்டு கரமறுக்க நினைத்திருக்கிற வேளையில் எஸ்தூர் ராஜ்ஜிய பிலேந்திரர் ராஜர் வேட்டை மார்க்கம் வருகிறதைக் கண்டு, இருகரத்தையு மறுத்து வனத்தில் விட்டோடிப் போனதாக.

பிலேந்திரர் தோற்ற விருத்தம்.

சித்ர வரிண மகுடமுடி சிரசில் மின்ன
தேகமதில் பொற்சரிகை யங்கி துன்ன
வெற்றி நிறைந் திலங்கு செங்கோல் காத்திலேந்தி
வெகு படைகளரசர் முன்பில் புகட்சி கூற;
முத்து நவரத்னமணி மாலை மின்ன
முறுகிதன் சேர் சாமலுங்கக்கிதம்பாடி
பத்தியுட னெஸ்தூர் நகராமுகின்ற
பார்த்திபனும் பிலேந்திர ராஜர் வருகின்றேமே.

தரு.

மகிபன் வந்தனரே—எஸ்தூர்
மன்னன் பிலேந்திரனென்னு மகரு—மகிபன்
மகிபன் வந்தனர், செகமெல்லாம் புகள்
தவமிலங்கியே, புகழ் நிறைந்திடும்
மதிபெற்றிடுங்குணல, துதியுற்றிடுமனேல
மங்கள இங்கிர்த, அங்க அலிங்கிர்த
சங்கையிலங்கிடு, அங்கயவஜீகா.........மகி
வச்சிரப்பதைக்கமுடன், மெச்சுமணிதுலங்க
கெச்சமுடன் கொலுசு, நட்செயலாயலுங்க
வடிவொளியிலகிய, படைகொடி பிரஜைகள்
திடமுடன்கொடிவிரு, துடன்புகள்கூறிட...மகி
தித்திம்த்தாளங்கள், சேர்ந்து இசைந்திடவே
திடுதிடுரெனவெடி, முரசுஅதிரிடவே
திட்டத்துடன் வெகு, கெட்டியதாகவே
சிமியோன்ராஜேந்திரன், ஜெகமதிலீன்றிடும்...மகி
சத்ய வாசகமிகு, நித்தியபூமனும்
தருமகுணமிலகு, விகசிதயோகனும்
சங்கை நிறைந்திடு, துங்கநரேந்திர
சிங்காரமேவிய, ஜெகபதியான.................மகிபன்

அதிவிருத்தம்.

கர்த்தனேசுயம்பேபோற்றி, கடவுளேசரணம்போற்றி
சத்தியவேதஞான, தற்பராபோற்றிபோற்றி
வெற்றியாய்ப்படைகளோடு, மேவியேவேட்டையாட
நித்தியமாகப் போறேன், ஜோதியே யென்னையாள்வீரே.

பிலேந்திரர் விருத்தம்.

ஈட்டிகள் வெலும்சூலம், எடுத்திருகாத்திலேந்தி
தே—மாயென்முன்வந்த, நீரசேவகரேகேளும்
காட்டினிற் காடிசிங்கம், கலைமானைவிலங்குயாவும்
மேட்டிமாய் வலைகள் கட்டி, வேட்டைகளாடுவீரே.

வ—ம். அகோவாரும் சேவகரே! இந்தக்காட்டில் பலமிருகங்களிருக்கிறபடியினால் காட்டைக் கலைத்து வேட்டையாடுவீருக.

அப்படியே வேட்டையாடுகிறோமையா சுவாமி.

அம்மாளின்னிசை.

அற்புதனே! மெய்ப்பொருளே! அளவில்லாநாயகனே
தற்பரனே சத்தியனே! சகலம்படைத்தோனே!
சற்பனையாயிருகாத்தை, தறித்துயெடுத்தேபோனார்
சிற்பகியாளெந்தனையே, சேசுவேகாத்தருள்வீர்.

தயரத்தரு.

அய்யோ அய்யோ என்ன செய்வேன், ஆதிசருவேஸ்பரனே!
வையகத் தோர்க்கேற்பிடாத, மாதுரோகியானேனையோ.
என்னைப் பயின்ற ஐயா தானும், இளையதாய்கை ஒப்பித்தேக
மனத்துணிவாயெனையடித்து, வஞ்சகம்செய்தான் பரனே.
பாதகியாள் எனமேல்பொல்லா, பலவர்மந்தான் நினைந்து
தாதை வருமுன்னதாக, தார்வனத்தில் வதைக்கச் சொன்னாள்
சப்பிரமஞ்சக்கட்டில்தன்னை, தலையாரிகள் தானெடுத்து,